செய்யும் பணிகளில்கூட, 2, 3 வருடங்களில் முடிக்க வேண்டிய பணிகள், 5 ஆண்டுகள் வரை நீடிப்பதற்கு இதுதான் காரணம். மதுராந்தகம் நகராட்சியில் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு இடம் பார்த்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இது தொடர்பாக துறை அதிகாரிகள்மூலம் ஆய்வு செய்து, என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்பதை ஆராய்ந்து பணிகள் விரைவுபடுத்தப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், அச்சிறுப்பாக்கம், கருங்குழி பேரூராட்சிகள் குறித்தும் கோரிக்கை வைத்தார்கள். பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பொறுத்தவரையில், சுத்திகரிப்பு நிலையத்திற்கு இடம் கிடைக்காததால், கசடு கழிவு மேலாண்மைத் திட்டம் (septage management) *திட்டத்தினைச் செயல்படுத்துகிறோம். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களால் 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் இத்திட்டத்தை எடுத்துக்கொண்டிருக்கிறோம். எனவே,* priority *அடிப்படையில், அந்தப் பேரூராட்சிகளைச் சேர்ப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 143, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

143—

மகளிர் கலைக் கல்லூரி

***2869—திரு. கே.எஸ். தென்னரசு:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு கிழக்கு தொகுதியில் மகளிர் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2019 ஜூலை 19]

ஈரோடு மாவட்டம், ஈரோடு கிழக்கு தொகுதியில் மகளிர் கலைக் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள்.*

திரு. கே.எஸ். தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், வங்கக் கடலோரம் சந்தனப் பேழையில் நீங்காத் துயில் கொண்டிருக்கும் தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) காவேரியை மீட்டுத் தந்த கரிகாலச் சோழன் மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், தென்பாண்டிச் சிங்கம் மனிதநேயப் பண்பாளர் அருமை அண்ணன் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

பகுத்தறிவுப் பகலவன், வெண்தாடி வேந்தர், பெண்ணுரிமை காத்த தந்தை பெரியார் பிறந்த மண்ணான ஈரோடு கிழக்கு தொகுதியில் மகளிர் கலைக் கல்லூரி ஒன்றினை அமைத்துக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், நேற்று முன்தினம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், விதி 110-ன்கீழ் 67 கோடியே 76 இலட்சம் ரூபாய் செலவில், ஈரோடு அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனை உயர் சிறப்பு மருத்துவமனையாக (Super Speciality Hospital) *மேம்படுத்தப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஈரோடு தொகுதி மக்களின் சார்பாகவும், ஈரோடு மாவட்ட மக்களின் சார்பாகவும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அண்ணன் துணை முதலமைச்சர் அவர்களுக்கும், உறுதுணையாக இருந்த நம்முடைய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அண்ணன் திரு. கே.ஏ.எஸ். அவர்களுக்கும், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அண்ணன் திரு. கே.சி.கே. அவர்களுக்கும், மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜய பாஸ்கர் அவர்களுக்கும் என்னுடைய சார்பாகவும், அண்ணன் கே.வி.ஆர். அவர்கள் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

[2019 ஜூலை 19

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய ஈரோடு மாவட்டத்தில், 2 அரசு கலைக் கல்லூரிகளும், ஒரு பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியும், 5 அரசு உதவிபெறும் கல்லூரிகளும், 14 சுயநிதிக் கல்லூரிகளும் என மொத்தம் 22 கல்லூரிகள் இருக்கின்றன. அந்த வகையில் ஈரோடு மாவட்டத்திலுள்ள 2 அரசு கலைக் கல்லூரிகளில் மாணாக்கர்கள் சேர்க்கைக்காக கடந்த ஆண்டு ஒப்பளிக்கப்பட்ட இடங்களில், 177 இடங்கள் காலியாக இருக்கின்றன. அதேபோல பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரியில் 162 இடங்கள் காலியாக இருக்கின்றன. அரசு உதவி பெறக்கூடிய 5 கல்லூரிகளிலே 370 இடங்கள் காலியாக இருக்கின்றன. 14 சுயநிதி கல்லூரிகளிலே 3,839 இடங்கள் காலியாக இருக்கின்றன. ஆக ஒட்டுமொத்தமாக மாணாக்கர்களுடைய சேர்க்கைக்காக எந்தவிதமான பாதிப்பும் இல்லாத அளவிற்கு, ஈரோடு மாவட்டத்தில் இருக்கக்கூடிய மாணவர்கள் உயர் கல்வி பெறக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவேதான், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்ட பகுதியிலே மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்று தனியாகத் தொடங்குவதற்குண்டான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள்.

திரு. கே.எஸ். தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத்தில் ஒரு மகளிர் கல்லூரி அமைப்பதற்கு மாநகராட்சிப் பகுதியில் இரண்டு ஏக்கர் நிலம் தேவை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த 2 ஏக்கர் நிலத்தை ஈரோடு கிழக்குத் தொகுதியிலேயே பெற்றுக் கொடுத்துவிடுகிறேன். ஈரோட்டில் 5 அரசு மேல்நிலைப் பள்ளிகளும், அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளும், அரசு உதவி பெறும் இருபாலர் மேல்நிலைப் பள்ளிகளும் இருக்கின்றன. அந்த வகையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவிகள் +2 படித்துவிட்டு வெளியே

2019 ஜூலை 19]

வருகின்றார்கள். இந்த ஏழை மாணவ, மாணவிகள் கல்லூரிப் படிப்பை தொடருவதற்கு ஏதுவாக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் பெண்களுக்காக பல்வேறு திட்டங்களைத் தந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில், இன்றைக்கு நம்முடைய சட்டமன்றத்தில்கூட அதிகமாக பெண்கள் இருக்கிற காரணத்தினாலும் பெண்கள்மீது அதிகமாக பற்று வைத்து, பெண்கள்தான் இந்த நாட்டின் கண்கள் என்று சொல்கின்ற இந்த நிலையில், மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் எடுத்துச் சொல்லி, மாண்புமிகு முதல்வர் அவர்களின் கருணைப் பார்வையோடு, ஈரோடு கிழக்கு தொகுதியில் ஒரு மகளிர் கல்லூரி அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமாய் அன்போடு வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாநகராட்சிப் பகுதியிலே 2 ஏக்கர் நிலம் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி, அங்கே கல்லூரி வேண்டுமென்று சொன்னார். புதிதாக ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க வேண்டுமென்றால், மாநகராட்சிப் பகுதியிலே 2 ஏக்கர் நிலமும், நகராட்சிப் பகுதியிலே 3 ஏக்கர் நிலமும், கிராம ஊராட்சிப் பகுதியிலே 5 ஏக்கர் நிலமும் தேவை என்பதை நான் அவரிடம் கோடிட்டுக் காட்டினேன். அதோடு மட்டுமல்லாமல், கல்லூரிக்குப் புதிய கட்டடம் கட்டுவதற்காக 9 கோடியே 86 இலட்சத்து 84 ஆயிரத்து 300 ரூபாய் தேவை என்பதையும், ஆண்டு ஒன்றுக்கு ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியிடங்களுக்கான ஊதியம் வழங்குவதற்காக 2 கோடியே 89 இலட்சத்து 66 ஆயிரத்து 143 ரூபாய் தேவை என்றும், ஒட்டுமொத்தமாக 12 கோடியே 76 இலட்சத்து 50 ஆயிரத்து 443 ரூபாய் தேவை என்பதையும் கோடிட்டுக் காட்டினேன்.*

அதோடுமட்டுமல்லாமல், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011-ல் ஆட்சிப் பொறுப்பேற்றபின் 65 புதிய கல்லூரிகளைத் தோற்றுவித்தார்கள். அதிலே 19 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மட்டும் ஏற்கெனவே மகளிருக்கு என்று தனியாக இருந்தன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்

தலைவி அம்மா அவர்கள் 2 கல்லூரிகளை தோற்றுவித்ததன் அடிப்படையிலே அது 21 கல்லூரிகளாக ஆனது. அதன் பிறகு தொடர்ந்து தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்ற அண்ணன் எடப்பாடியார் அவர்கள் பெண்களுக்காக தனியாக ஒரு கல்லூரியை விழுப்புரம் மாவட்டத்திலே விழுப்புரத்தை மையமாகக் கொண்டு வழங்கினார். அதோடு, 22 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் பெண்களுக்காகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இன்றைக்கு ஈரோடு மாவட்டத்தில், ஈரோடு மையப் பகுதியைப் பார்க்கின்றபொழுது, ஈரோடு மேற்குப் பகுதியில் மட்டும் 4 அரசு உதவிபெறும் கல்லூரிகள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஈரோடு கிழக்குப் பகுதியில் எதுவும் இல்லை என்ற ஆதங்கத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றார். ஆகவே, அந்த வகையில், இன்றைக்கு அரசு கல்லூரி, அரசு உதவி பெறும் கல்லூரிகளில் 709 இடங்கள் காலியாக இருந்தாலும்கூட, எதிர்வரும் காலத்திலே அந்தப் பகுதியில் பெண்களுக்காக தனியாக ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கொள்கையானது அனைவருக்கும் சமமான உயர் கல்வி வழங்கப்பட வேண்டும் என்பதுதான். மாணாக்கர்களுக்கு இணையாக மாணவிகள், அதேபோல ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்த அனைத்து மாணவர்களுடைய சேர்க்கையை உயர்த்திக் கொண்டிருக்கின்ற காலகட்டத்தில், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களோடு கலந்தாலோசித்து, இனி வரும் காலகட்டத்தில் ஈரோடு கிழக்குப் பகுதியில் மாணவிகளுக்கென்று தனியாக கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைப்பது குறித்து அரசானது பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 144, மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.